தின கனி காலை நாளிதழ்
மாவட்டம் & தாலுகா வாரியாக நிருபர்கள் புகைப்பட கலைஞர்கள் தேவை
Call : 044-2272060 9443699066

admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI www.dhinakani.com காலை நாளிதழ்




மலர்:03 இதழ்:242 4 பக்கங்கள் 31:03:2026 செவ்வாய்க்கிழமை விலை ரூ,6 வருடசந்தா ரூ,1825



நல்லாறு எனினும் கொளல்தீது மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று.

**விளக்கம்:** பிறரிடம் பொருள் பெற்றுக் கொள்ளுதல் நல்ல நெறி என்றாலும் கொள்ளல் தீமையானது, மேலுலகம் இல்லை என்றாலும் பிறக்குக் கொடுப்பதே சிறந்தது.

## இலங்கைக்கு 38,000 டன் பெட்ரோல், டீசல், நன்றி தெரிவித்த அதிபர் திசாநாயக்க



**புதுடெல்லி: மார்ச்,31**

புதுடெல்லி எரிபொருள் தட்டுப்பாட்டால் பரிதவித்து வரும் இலங்கைக்கு 38,000 டன் பெட்ரோல், டீசலை இந்தியா வழங்கி உள்ளது.அமெரிக்கா, ஈரான் இடையிலான போர் காரணமாக உலகம் முழுவதும் பெட்ரோல், டீசலுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக ஆசிய நாடுகள் எரிபொருள் பற்றாக்குறையால் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளன. இந்தியாவின் அண்டை நாடான இலங்கையில் பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு மிகவும் மோசமான நிலையை எட்டி உள்ளது. எரிபொருள் தட்டுப்பாட்டை சமாளிக்க அந்த நாட்டில் புதன்கிழமை பொது விடுமுறை அறிவிக்கப்பட்டு உள்ளது. ஒரு நான்கு சக்கர வாகனத்துக்கு ஒரு வாரத்துக்கு 15 லிட்டர் பெட்ரோல், இரு சக்கர வாகனத்துக்கு ஒரு வாரத்துக்கு 5 லிட்டர் பெட்ரோல் மட்டுமே விநியோகம் செய்யப்படுகிறது. பெட்ரோல், டீசல் விலையும் கணிசமாக உயர்த்தப்பட்டு உள்ளது.போர் காரணமாக நிலக்கரி இறக்குமதி பாதிக்கப்பட்டு இலங்கையின் அனல் மின் நிலையங்கள் தொடர்ந்து செயல்படுவதில் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. இதனால் நாள்தோறும் பல மணி நேரம் மின் வெட்டு அமல் செய்யப்படுகிறது. இந்த சூழலில் இலங்கைக்கு 38,000 டன் எரிபொருளை இந்தியா வழங்கி உள்ளது.இது குறித்து அந்த நாட்டு அதிபர் அனுர குமார திசாநாயக்க சமூக வலைதளத்தில் நேற்று வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது: சில நாட்களுக்கு முன்பு இந்திய பிரதமர் நரேந்திர மோடியிடம் தொலைபேசியில் பேசினேன். அப்போது இலங்கையில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு குறித்து அவரிடம் எடுத்துரைத்தேன். இதைத் தொடர்ந்து கடந்த சனிக்கிழமை இலங்கைக்கு 38,000 டன் எரிபொருளை இந்தியா வழங்கியது.இந்தியாவின் விரைவான உதவிக்கு நன்றிக் கடன் பட்டிருக்கிறோம். இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் எங்களோடு ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகிறார். அவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.இவ்வாறு அதிபர் அனுர குமார திசாநாயக்க கூறினார்.

## சாத்தான்குளம் தந்தை, மகன் கொலை வழக்கு: 9 குற்றவாளிகளுக்கான தண்டனை விவரம் தள்ளிவைப்பு



**மதுரை: மார்ச்,31**

மதுரை சாத்தான்குளம் தந்தை, மகன் கொலை வழக்கில் குற்றவாளிகள் 9 பேருக்கும் நேற்று தண்டனை விவரம் அறிவிப்பதாக மதுரை நீதிமன்றம் தெரிவித்திருந்த நிலையில், ஏப்.2-ம் தேதிக்கு தள்ளிவைத்து உத்தரவிட்டுள்ளது.தூத்துக்குடி மாவட்டம், சாத்தான் குளத்தைச் சேர்ந்த ஜெயராஜ் மற்றும் அவரது மகன் பென்னிக்ஸ் ஆகியோர் சாத்தான்குளத்தில் செல்போன் கடை நடத்தி வந்தனர். கரோனா ஊரடங்கின்போது குறித்த நேரத்தைத் தாண்டி கடையை திறந்து வைத்திருந்ததாகக் கூறி, இவர்கள் இருவரையும் கடந்த 2020 ஜூன் 19-ம் தேதி இரவு சாத்தான்குளம் போலீஸார், காவல் நிலையம் அழைத்துச் சென்று கடுமையாகத் தாக்கினர்.இதில் ஜூன் 22-ம் தேதி பென்னிக்ஸும், 23-ம் தேதி ஜெயராஜும் உயிரிழந்தனர். இந்த வழக்கை சிபிசிஐடி விசாரித்த நிலையில், உயர் நீதிமன்ற மதுரை அமர்வு உத்தரவின்படி, சிபிஐ விசாரணைக்கு மாற்றப்பட்டது. இதை கொலை வழக்காக சிபிஐ பதிவு செய்து, காவல் ஆய்வாளர் ஸ்ரீதர், உதவி ஆய்வாளர்கள் பாலகிருஷ்ணன், ரகு கணேஷ், சிறப்புசார்பு ஆய்வாளர் பால்துரை, தலைமைக் காவலர் முருகன், காவலர்கள் சாமதுரை, முத்துராஜா, செல்லத்துரை, தாமஸ் பிரான்சிஸ், வெயிலுமுத்து ஆகிய 10 பேர் கைது செய்யப்பட்டு, மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர். இதில் பால்துரை சிறையில் உடல்நலக் குறைவால் உயிரிழந்தார். இந்த வழக்கு விசாரணை கடந்த 5 ஆண்டுகளாக மதுரை நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. மொத்தம் 100-க்கும் மேற்பட்ட சாட்சிகளிடம் விசாரணை நடத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து, கடந்த 23-ம் தேதி நீதிபதி முத்துக்குமரன் தீர்ப்பளித்தார். "தந்தை, மகன் இருவரையும் கம்பு, கம்பி போன்ற ஆயுதங்களால் போலீஸார் கொடூரமாகத் தாக்கியுள்ளனர். மரணத்தை விளைவிக்கும் காயங்கள் உருவாகும் வகையில் இருவரும் தாக்கப்பட்டுள்ளனர்.

# ஸ்டாலினின் கையிருப்பு ரூ.10 ஆயிரம் மட்டுமே; விஜய்க்கு ரூ.404 கோடிக்கு அசையும் சொத்து



**சென்னை: மார்ச்,31**

சென்னை கையிருப்பாக ரூ.10 ஆயிரம் மட்டுமே ரொக்கம் இருப்பதாகவும், ரூ.6.26 கோடிக்கு அசையும், அசையா சொத்துகள் இருப்பதாகவும் வேட்புமனுவில் முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். தவெக தலைவர் விஜய், தனக்கு ரூ.404 கோடியில் அசையும் சொத்துகள் இருப்பதாக தெரிவித்துள்ளார். சென்னை கொளத்தூரில் போட்டியிடும் மு.க.ஸ்டாலின் நேற்று வேட்புமனு தாக்கல் செய்தார். அத்துடன் அவர் தாக்கல் செய்துள்ள பிரமாணப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள சொத்து விவரம்:கடந்த ஆண்டு தனக்கு ரூ.30.59 லட்சமும், மனைவி துர்காவுக்கு ரூ.5.33 லட்சமும் வருமானம் கிடைத்ததாக வருமான வரி கணக்கில் தெரிவித்துள்ளார். தன்னிடம் தற்போது கையிருப்பாக ரூ.10 ஆயிரமும், மனைவி துர்காவிடம் ரூ.40 ஆயிரமும் ரொக்கம் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார். தன்னிடம் நகைகள் எதுவும் இல்லை. மனைவி துர்காவிடம் 720 கிராம் நகைகள் உள்ளன. இருவர் பெயரிலும் கார் உட்பட எந்த வாகனங்களும் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். தனது பெயரில் ரூ.3.30 கோடி மதிப்பிலான அசையும் சொத்துகளும், மனைவி துர்கா பெயரில் ரூ.1.32 கோடி மதிப்பிலான அசையும் சொத்துகளும் என மொத்தம் ரூ.4.62 கோடிக்கு அசையும் சொத்துகள் உள்ளன.விவசாய நிலம், குடியிருப்பு கட்டிடம் என முதல்வர் ஸ்டாலின் பெயரில், ரூ.2.96 கோடிக்கும், மனைவி துர்கா பெயரில் ரூ.2.11 கோடிக்கும் என ரூ.5.07 கோடி அசையா சொத்துகள் உள்ளன. மொத்தமாக, அசையும், அசையா சொத்துகள் என ரூ.9.69 கோடி சொத்துகள் உள்ளன. தனக்கும், தனது மனவைிக்கும் கடன்கள் இல்லை. வழக்குகள் ஏதும் இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.விஜய் சொத்து மதிப்பு: பெரம்பூர் தொகுதியில் போட்டியிடும் தவெக தலைவர் விஜய் தனது வேட்புமனுவை நேற்று தாக்கல் செய்தார். அனர் தனது பிரமாண பத்திரத்தில்,கையில் ரூ.2 லட்சம் ரொக்கம் இருப்பதாகவும், மனைவியிடம் ரூ.1 லட்சம் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். வங்கி சேமிப்பு கணக்குகள், வைப்பீடுகள் என மொத்தம் ரூ.404.58 கோடிக்கு அசையும் சொத்துகள் உள்ளன. கட்டிடங்கள், குடியிருப்புகள், நிலங்கள் என அசையா சொத்துகளின் மதிப்பு ரூ.115.13 கோடியாகும். குற்ற வழக்குகள் ஏதும் தன் பெயரில் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார்.தனது மனைவி சங்கீதா பெயரில் ரூ.15.51 கோடியில் அசையும் சொத்துகள், ரூ.2.50 கோடி மதிப்பு அசையா சொத்துகள் இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். 2 பிஎம்டபிள்யு, லெக்சஸ், டோயட்டோ வெல்பயர், மாருதி ஸ்விப்ட், டிவிஎஸ் எக்ஸ்எல் உள்ளிட்ட வாகனங்கள் இருக்கின்றன. தனது பெயரில் ரூ.1.20 கோடி மதிப்பிலான 883 கிராம் தங்கம் உள்ளது. 135 காரட் வைர நகைகள் மனைவி சங்கீதா பெயரில் இருக்கிறது. கொடைக்கானலில் 2 பங்களா உள்ளது. தனது பெயரில் கடன் எதுவும் இல்லை என்று கூறியுள்ளார். அதேநேரத்தில், தந்தை சந்திரசேகருக்கு ரூ.3.02 கோடி, மனைவி சங்கீதாவுக்கு ரூ.12.60 கோடி, தாய் ஷோபாவுக்கு ரூ8.71 லட்சம், புஸ்ஸி ஆனந்த்துக்கு ரூ.3 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளதாகவும் பிரமாண பத்திரத்தில் தெரிவித்துள்ளார்.

## புழுதிவாக்கம் ரயில் நிலைய லிப்டில் சிக்கிய 17 பேர் மீட்பு ரயில்வே அவசர எண் இயங்கவில்லை என குற்றச்சாட்டு



**சென்னை: மார்ச்,31**

சென்னை ஆதம்பாக்கம் பகுதியில் வசிப்பவர் சங்கர். இவரது மனைவி சாந்தி. இவர்கள் இருவரும் நேற்று முன்தினம் திருவல்லிக்கேணி சென்றனர். பின்னர், அங்கிருந்து பறக்கும் ரயில் மூலம், ஆதம்பாக்கம் அருகே அமைந்துள்ள புழுதிவாக்கம் ரயில் நிலையத்துக்கு இரவு 9:30 மணிக்கு வந்தனர்.அங்கிருந்து இருவரும் மின் தூக்கி (லிஃப்ட்) மூலமாக கீழே இறங்க முடிவு செய்தனர். அங்கு ஏற்கெனவே, 15 பேர் காத்திருந்தனர். அவர்கள் அனைவரும் மின்தூக்கி வந்தவுடன் அதில் ஏறினர். மின்தூக்கி புறப்பட்ட சில நொடியில் 2-வது மாடிக்கும் - முதல் மாடிக்கும் இடையே பாதியிலேயே நின்றது. இதில் பயணம் செய்த 17 பேரும் சிக்கித் தவித்தனர். மேலும், உதவி கேட்டு குரல் எழுப்பினர். இருப்பினும் யாரும் வரவில்லை. இதையடுத்து, தெற்கு ரயில்வே நிர்வாகத்துக்கும், மின் தூக்கியில் ஒட்டப்பட்டிருந்த அவசர உதவி எண்ணுக்கும் தொடர்ந்து தொடர்பு கொள்ள முயற்சி செய்தனர். ஆனால், எந்தவித உதவியும் கிடைக்கவில்லை. இதைத் தொடர்ந்து, சங்கர் செல்போன் மூலமாக, தனது நண்பரை அழைத்து அவர் மூலம் காவல்துறை அவசர உதவிக்கு தொடர்பு கொண்டு தகவல் தெரிவித்தார். இதன்பேரில், அடுத்த 15 நிமிடத்தில், வேளச்சேரி தீயணைப்பு மற்றும் மீட்பு பணி நிலைய அதிகாரி பிரபாகரன் தலைமையிலான 5 தீயணைப்பு மற்றும் மீட்பு பணி வீரர்கள் புழுதிவாக்கம் ரயில் நிலையத்துக்கு வந்தனர். பின்னர், நீண்ட போராட்டத்துக்குப் பின், தீயணைப்பு துறை வீரர்கள் 2-வது தளத்தில் உள்ள மின்தூக்கி நுழைவு வாயிலை திறந்து, அதன் வாயிலாக மின் தூக்கி மேற்பகுதிக்கு சென்று, அதில் பொருத்தப்பட்டிருந்த மின்விசிறியை அகற்றினர். பின்னர், அதன் வழியாக முதலில் 4 குழந்தைகளை மிகவும் பத்திரமாக மீட்டனர். பின்னர் மற்ற 13 பேரையும் மீட்டனர். இதுகுறித்து, ரயில் பயணிகள் கூறுகையில், "தெற்கு ரயில் வேயின் அவசர எண்ணுக்கு தொடர்பு கொண்டாலும் எந்த பதிலும் இல்லை. மின் தூக்கியில் ஒட்டப்பட்ட உதவி எண்ணும் இயங்கவில்லை. சிறிது தாமதம் ஏற்பட்டு இருந்தால் கூட விபரீதம் ஏற்பட்டிருக்கும். ரயில்வே நிர்வாகம் இனிமேலாவது கவனமாக செயல்படவேண்டும். ரயில் நிலையத்தில் பயணிகளின் அடிப்படை வசதிகளை முறையாக பராமரிக்க வேண்டும்.அப்போது தான் இதுபோன்ற பிரச்சினை ஏற்படாமல் தவிர்க்க முடியும்" என்றனர். இதுகுறித்து, சென்னை ரயில்வே கோட்ட அதிகாரியிடம் கேட்டபோது, ``மின்தூக்கி தான் பிரச்சினை.இதை பராமரிக்கும் தனியார் நிறுவனத்துக்கு தகவல் கொடுக்கப்பட்டுள்ளது. விரைவில் இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும்'' என்றார்.

## குவைத் மீது ஈரான் நடத்திய தாக்குதலில் ராமநாதபுரம் இளைஞர் உயிரிழப்பு



**ராமநாதபுரம்: மார்ச்,31**

ராமநாதபுரம் ஈரான் தாக்குதலில் குவைத் நாட்டில் பணிபுரிந்த ராமநாதபுரம் இளைஞர் உயிரிழந்தார். அவரது உடலை சொந்த ஊருக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவரது மனைவி ராமநாதபுரம் ஆட்சியரிடம் மனு அளித்தார். ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் தாலுகா அணிகுருந்தான் கிராமத்தைச் சேர்ந்த கிருஷ்ணன் மகன் சந்தான செல்வம்(36). இவர் நேற்று முன்தினம் இரவு குவைத் மீது ஈரான் நடத்திய தாக்குதலில் உயிரிழந்தார். குவைத் நாட்டில் உள்ள அமெரிக்க ராணுவ தளம் மற்றும் கடல்நீரை குடிநீராக்கும் திட்டம், மின் உற்பத்தி நிலையங்கள் மீது நேற்று முன்தினம் இரவு ஈரான் ஏவுகணை தாக்குதல் நடத்தியுள்ளது.இதில் அங்குள்ள ஒரு நிறுவனத்தில் ஒப்பந்த பணியாளராக பணிபுரிந்த சந்தான செல்வம் உயிரிழந்தார். இதுகுறித்து இந்திய தூதரகம் மூலம் அவரது குடும்பத்துக்கு நேற்று காலை தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் சந்தான செல்வத்தின் மனைவி கவுசல்யா, தனது மகன் ஜஸ்வின் (7), மகள் சாய் யுவன்யா (3) மற்றும் உறவினர்கள், கிராம மக்களுடன் ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு நேற்று வந்தார்.அங்கு ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோனை சந்தித்து, குவைத் நாட்டில் இறந்த தனது கணவரின் உடலை சொந்த ஊருக்கு கொண்டு வரவும், தனது குடும்ப வாழ்வாதாரத்துக்கும், குழந்தைகளை படிக்க வைக்கவும் நிதியுதவி அளிக்க வேண்டும் என்றும் கண்ணீர் மல்க மனு அளித்தார். மேலும் ராமநாதபுரம் எம்பி நவாஸ்கனி அலுவலகத்திலும் மனு அளித்தனர். இதுகுறித்து கவுசல்யா கூறியதாவது: எனது கணவர் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக ஒப்பந்த தொழிலாளியாக குவைத் நாட்டில் பணிபுரிந்து வந்தார்.நேற்று முன்தினம் இரவு என்னிடம் பேசினார். அதன்பின்னர் அவரை தொடர்பு கொள்ள முடியவில்லை. அவரது செல்போன் அணைத்து வைக்கப்பட்டதாக தகவல் வந்தது. இன்று (நேற்று) காலையில் அவர் இறந்துவிட்டதாக இந்தியதூதரக அதிகாரிகள் தகவல் தெரிவித்தனர்.இதனால் நானும் எனது குழந்தைகளும் துயரத்தில் இருக்கிறோம். எனது கணவரின் உடலை நல்லடக்கம் செய்ய வேண்டும்.எனவே மத்திய, மாநில அரசுகள் எனது கணவர் உடலை சொந்த ஊர் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் எனது குடும்பத்துக்கு நிதியுதவி அளிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

கிள்ளியூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பைங்குளத்தில்

# மகளிர் சுய உதவிக்குழுவினரின் இருசக்கர வாகனப் பேரணி

## கன்னியாகுமரி கலெக்டர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்



கன்னியாகுமரி, மார்ச். 31–

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின் படி, வரும் தேர்தலில் 100 சதவீதம் வாக்களிப்பதை வலியுறுத்தி, *SVEEP (Systematic Voters' Education and Electoral Participation)* திட்டத்தின் கீழ் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன்ஒருபகுதியாக, மாவட்ட மகளிர் திட்டத்தின்சார்பில்கன்னியாகுமரி மாவட்டம் கிள்ளியூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பைங்குளம் கூட்டாலுமூடு பகுதியில் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியத்தை வலியுறுத்தி, மகளிர் சுயஉதவிக்குழுவினரின் இருவாகனசக்கர விழிப்புணர்வு பேரணியை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா (30.03.2026) அன்று கொடியசைத்து, துவக்கி வைத்து தெரிவிக்கையில்

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின் படி,தமிழ்நாடுசட்டமன்ற பொதுத்தேர்தல் வரும் ஏப்ரல் 23ம். தேதி நடைபெறுவதையொட்டி, 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு வாக்காளர்களிடையே ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் இன்று கிள்ளியூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பைங்குளம் கூட்டாலுமூடு பகுதியில் மகளிர் சுய உதவிக்குழு (SHGs) உறுப்பினர்கள் பங்கேற்ற மாபெரும் இருசக்கர வாகன விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

"எனது வாக்கு விற்பனைக்கு அல்ல" மற்றும் "100% வாக்குப்பதிவு" என்பதை வலியுறுத்தி பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. திரளான மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள்தங்கள் இருசக்கர வாகனங்களில் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்திச் சென்றனர்.

ஜனநாயகக் கடமையான வாக்களிப்பதன் அவசியத்தை ஒவ்வொரு வீட்டிற்கும் கொண்டு செல்ல வேண்டும் என்றும், வாக்குரிமைபெற்ற அனைவரும்தவறாமல்வாக்களிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது. இவ்வாறு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா தெரிவித்தார்.

நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் மகளிர் திட்டம் திட்ட இயக்குநர் பத்ஹூ முகம்மது நசீர், உதவி திட்ட இயக்குநர்கள், மகளிர் சுயஉதவிக்குழுவினர், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



இராஜபாளையம் சட்டமன்ற வேட்பாளராக தேசிய ஜனநாயக கூட்டணியின் சார்பில் பிரிசில்லா பாண்டியன் இராஜபாளையம்தொகுதியில் தாமரை சின்னத்தில் போட்டியிடுகிறார் .



செங்கல்பட்டு மாவட்டம், சோளிங்கநல்லூர் செயின்ட் ஜோசப் கல்லூரியில் 23.04.2026 அன்று2026சட்டமன்றதேர்தல்நடைபெறுவதையொட்டி100%வாக்குபதிவைவலியுறுத்தி மாபெறும் தேர்தல் விழிப்புணர்வு பேரணியை தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் எஸ்.மாலதி ஹெலன் கொடியசைத்து துவக்கிவைத்தார்.இதில் மாவட்ட வருவாய் அலுவலர் கணேஷ்குமார், துணை ஆட்சியர்(பயிற்சி) மணியரசன், தேர்தல் நடத்தும் அலுவலர் திருநாவுக்கரசு, அரசு அலுவலர்கள் மற்றும் மாணவ/மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

# வேட்டவலத்தில் கிறிஸ்தவர்கள் குருத்தோலை ஞாயிறு ஊர்வலம்




வேட்டவலம், மார்ச்.31–

வேட்டவலத்தில் கிறிஸ்தவர்களின்புனித வாரத்தின் தொடக்க நாளான குருத்தோலை ஞாயிறை முன்னிட்டு நேற்று முன்தினம் காலை 7மணியளவில் சின்ன கடை தெருவில் இருந்து கிறிஸ்தவர்கள் கையில்குருத்தோலைஏந்தி ஊர்வலமாக ஓசான்னா பாடல் பாடிய படி பங்குத் தந்தை ஆரோக்கிய சாமி,உதவி பங்குத்தந்தை சூசை ராஜ் தலைமையில் புனித மரியாவின் மாசற்ற இருதய ஆலயம் வந்தடைந்தனர்.

தொடர்ந்து சிறப்பு ஆடம்பரகூட்டுத்திருப்பலியினை பங்குத்தந்தை ஆரோக்கியசாமி நடத்தினார். இதில் ஏராளமான கிறிஸ்தவர்கள் கலந்து கொண்டனர்.இதே போல் வேட்டவலம் மறை வட்டத்திற்கு உட்பட்ட ஆவூர்,ஜமீன்கூடலூர்,நா.கெங்கப்பட்டு, சாணிப்பூண்டி, மதுராம்பட்டு ஆகிய பகுதிகளில் ஏராளமான கிறிஸ்தவர்கள் குருத்தோலையுடன் ஊர்வலமாக சென்றனர்.

# மகளிர் சுய உதவிக்குழுவினரின் 100 சதவீத வாக்குப்பதிவு விழிப்புணர்வு நிகழ்ச்சி

## கள்ளக்குறிச்சி கலெக்டர் தகவல்



கள்ளக்குறிச்சி, மார்ச். 31–

கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் வட்டாரம், மூங்கில்பாடி கிராமத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 முன்னிட்டு மகளிர் சுய உதவிக்குழுவினர் பங்கேற்ற 100 சதவீத வாக்குப் பதிவு விழிப்புணர்வு நிகழ்ச்சி 29.03.2026 அன்று நடைபெற்றது.

இந்தியதேர்தல்ஆணையத்தின் அறிவிப்பிற்கிணங்க, தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 100 சதவீதம் வாக்குப்பதிவை ஏற்படுத்தும் வகையில் பல்வேறு துறைகளின் சார்பில் வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் சின்ன சேலம் வட்டம், மூங்கில்பாடி கிராமத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 முன்னிட்டு மகளிர்சுய உதவிக்குழுவினர் பங்கேற்ற 100 சதவீத வாக்குப்பதிவு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ரங்கோலி, மருதாணி வரைதல், துண்டு பிரசுரம் வழங்குதல், பலூன் பறக்க விடுதல், உறுதிமொழி ஏற்பு உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வாக்காளர்களிடையே சட்டமன்றத் தேர்தல் 100 சதவீத வாக்குப்பதிவு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

எனவே "ஓட்டு என்பது நமது உரிமை" என்பதை கருத்தில் கொண்டு வாக்காளர்கள் ஒவ்வொருவரும் தங்கள் ஜனநாயகக் கடமையினை நிறைவேற்றும் வகையில் அனைவரும் வாக்களிக்க வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த் தெரிவித்தார்.

# திருவள்ளூர் அடுத்த போளிவாக்கத்தில் 121ஆம் ஆண்டு மாரியம்மன் ஜாத்திரை திருவிழா



திருவள்ளூர், மார்ச். 31–

திருவள்ளூர் அடுத்துள்ள போளிவாக்கம் கிராமத்தில் மாரியம்மன் கோயில் ஜாத்திரை திருவிழா கோலாகலமாக நடைபெற்றது.விழாவையொட்டி கெங்கையம்மனுக்கு காப்பு கட்டுதல் நிகழ்வு நடைபெற்றது.

இதை அடுத்து கூழ் வார்த்தல் விழாவும் கெங்கையம்மனுக்கு ஊர்கூடி பொங்கல் வைத்து படையல் போட்டனர்.

24 ம் தேதி மாலை பொன்னியம்மனுக் ஊர் கூடி பொங்கல் வைத்து, அம்மனை வரவழைத்து பொன்னியம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் செய்து அன்று இரவு மாரியம்மனுக்கு காப்பு கட்டுதல் நிகழ்ச்சி நடைபெற்றது. அம்மனுக்கு அலங்காரம் செய்து அடி தாண்டம் போடுதல், நாதஸ்வரம், தாரை தம்பட்டை, ராஜ மேளம், பம்பை உடுக்கையுடன் வீதி உலா, கூழ் வார்த்தல், படையல் சாத்துபடி, நடைபெற்றது.

இதனையடுத்து அன்னதானம் நடைபெற்றது. இரவு 9 மணிக்குஅம்மனுக்கு சிறப்பு அலங்காரம் செய்து வானவேடிக்கைகளுடன் வீதி உலா உற்சவம், கரகாட்டம், சிலம்பாட்டம், நையாண்டி மேளம், பொய்க்கால் குதிரை, பேண்டு வாத்தியம், ராஜ மேளம் ஆகியவை நடைபெற்றது.

இவ்விழாவுக்கான ஏற்பாடுகளை கிராம மக்கள் அனைவரும்ஒன்றுசேர்ந்து சிறப்பாக செய்திருந்தனர்.



விருதுநகர் மாவட்டம் இராஜபாளையம் ஒன்றியம் ஜமீன் கொல்லங்கொண்டான் ,ஊராட்சியில், பல ஆண்டுகாலமாக தூர்வாரப்படாத வாருகால் தற்போது தூர்வாரப்பட்டு, மிகச் சிறப்பான பணி நடைபெற்று கொண்டு இருக்கிறது, இதற்கு உறுதுணையாகஇருந்தஉதவிஇயக்குனர்(ஊராட்சிவிருதுநகர்) வட்டார வளர்ச்சி அலுவலர் ( கிராம ஊராட்சி) இராஜபாளையம் மற்றும்ஈஸ்வரன்ஊராட்சிசெயலர்இவர்களின்பணியைகண்டு மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர், இவர்களது வளர்ச்சிப் பணி மேலும் தொடர வேண்டும் என ஜமீன் கொல்லங் கொண்டான். ஒன்றாவது வார்டு மக்கள் வாழ்த்தி வரவேற்றார்கள்.



குடியாத்தம் அரசு மருத்துவமனையில் நடைபெற்ற குருதி கொடை நிகழ்ச்சியில் குடியாத்தம்குருதிகொடையாளர்கள்பலர்பங்கேற்றனர்.நிகழ்ச்சியில்சிறப்புவிருந்தினராக ஜெகதீசன், மனோகரன் ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும் நிறுவனத்தின் தலைவர் டில்லிபாபு மற்றும் செயலாளர் ஷண்முகம் தவசி , வடிவேல் ஹரி, அடியார்கள் சேவை அன்னதான அறக்கட்டளையின் நிறுவனர் மற்றும் ஸ்ரீதயா பவுண்டேஷன் வேலூர் மாவட்ட மகளிர் அணி செயலாளர் பரிமளா ஆகியோர் கலந்துகொண்டு இந்நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

# ஆல் மீடியா பிரஸ் ஜெர்னலிஸ்ட் யூனியன் சார்பில் தேர்தல் விழிப்புணர்வு பேரணி

## தேர்தல் நடத்தும் உதவி அலுவலர் தொடங்கி வைத்தார்




ஆலங்குடி,மார்ச்.31–

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி வட்டாட்சியர் அலுவலகத்தில் இந்திய தேர்தல் ஆணையம் தமிழ் நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026. ஆலங்குடி சட்டமன்ற தொகுதியில் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து ஆலங்குடி வருவாய்த் துறையினர் ஆல் மீடியா பிரஸ் ஜெர்னலிஸ்ட் யூனியன் இணைந்து வாக்காளர் விழிப்புணர்வு பேரணி நடத்தினர்.

பேரணியை ஆலங்குடி தேர்தல் நடத்தும் உதவி அலுவலர் வட்டாச்சியர் ஜபருல்லா தொடங்கிவைத்தார். பேரணியானது நகரின் முக்கிய வீதிகளில் சென்று அபிராமி மெட்ரிக் பள்ளியியை சென்றடைந்தது.

இந்நிகழ்வில் ஆலங்குடி வட்டாட்சியர் ஜபருல்லா,ஆலங்குடி பேரூராட்சி தலைவர் ராசி முருகானந்தம், மருத்துவர் முத்தையா, அனைத்து வியாபாரிகள் சங்க தலைவர் மனமோகன், மாநிலத் தலைவர் சுரேஷ்குமார், மாநில செய்தி தொடர்பாளர் ப. மாணிக்க வாசகம், மாவட்டத் தலைவர் இரா சரவணன், மாவட்ட செயலாளர் ஆர் எம் மாமுண்டி செல்வம், மாவட்ட பொருளாளர் தனபால், மாவட்ட செய்தி தொடர்பாளர்அசோக், மாவட்ட சட்ட ஆலோசகர் சசிகலா, மாவட்ட துணைச் தலைவர் அறிவழகன், மாவட்ட துணைச் செயலாளர் பி சரவணன், மற்றும் அனைத்து ஊடக துறையினர், வருவாய்த் துறையினர் ஆல் மீடியா பிரஸ் ஜர்னலிஸ்ட் யூனியன் மாநில மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

விழுப்புரம் மாவட்டத்தில்

# 100 சதவீதம் வாக்களிப்பதனை வலியுறுத்தும் விதமாக காய்கறிகள் மற்றும் பழங்கள் மூலம் வடிவமைக்கப்பட்டுள்ள விழிப்புணர்வு அரங்கினை கலெக்டர் திறந்து வைத்தார்



விழுப்புரம், மார்ச். 31–

விழுப்புரம் மாவட்ட பெருந்திட்ட வளாகத்தில் உள்ள சிறுவர் பூங்காவில் தோட்டக்கலைத்துறை சார்பில், தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 முன்னிட்டு, 100 சதவீதம் வாக்களிப்பதனை வலியுறுத்தும் விதமாக காய்கறிகள் மற்றும் பழங்கள் மூலம் வடிவமைக்கப்பட்டுள்ள விழிப்புணர்வுஅரங்கினைமாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், (29.03.2026) அன்று திறந்து வைத்தார்.

மாவட்ட தேர்தல்அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், தெரிவிக்கையில், தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 முன்னிட்டு, இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின் படி, விழுப்புரம் மாவட்டத்தில், தேர்தல் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில் நடைபெறவிருக்கும் சட்டமன்ற பொதுத்தேர்தலில் 100 சதவீதம் வாக்குப்பதிவு அடைந்திடும் வகையில், வாக்களிப்பதன் அவசியம் குறித்து, பொதுமக்கள் மற்றும் முதல் தலைமுறை வாக்காளர்களிடம் பல்வேறு துறைகளின் சார்பாக விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அந்தவகையில், தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 முன்னிட்டு, மாவட்ட பெருந்திட்ட வளாகத்தில் உள்ள சிறுவர் பூங்காவில் தோட்டக்கலைத்துறை சார்பில், 100சதவீதம் வாக்களிப்பதனை வலியுறுத்தும் விதமாக காய்கறிகள் மற்றும் பழங்கள் மூலம் வடிவமைக்கப்பட்டுள்ள விழிப்புணர்வு அரங்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த விழிப்புணர்வு அரங்கில் பல்வேறு காய்கறிகள் மற்றும் பழங்களை பயன்படுத்தி 100 சதவீதம் வாக்களிப்பதனை வலியுறுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மேலும், 100 சதவீதம் வாக்களிப்போம் என்ற விழிப்புணர்வு துண்டு பிரசுரத்தினை பொதுமக்கள் மற்றும் முதல் தலைமுறை வாக்காளர்களிடம் வழங்கி வாக்களிப்பதன் அவசியம் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

விழுப்புரம் தோட்டக்கலைத்துறைசார்பில்அமைக்கப்பட்டுள்ள 100 சதவீதம் வாக்களிப்பதனை வலியுறுத்தும் விழிப்புணர்வு அரங்கனை ஏராளமான பொதுமக்கள்மற்றும்முதல் தலைமுறை வாக்காளர்களான இளைஞர்கள் என அனைவரும் பார்வையிட்டு செல்கிறனர்.

மேலும், பொதுமக்கள் மற்றும் முதல் தலைமுறை வாக்காளர்கள் தங்கள் ஜனநாயகக் கடமையினை நிறைவேற்றிடும் வகையில், பல்வேறு நிகழ்ச்சிகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

எனவே நாம் அனைவரும்வருகின்ற(23.04.2026) அன்று வாக்குச்சாவடிக்கு சென்று வாக்களிப்போம். விழுப்புரம் மாவட்டத்தில் 100 சதவீதம் வாக்குப்பதிவை ஏற்படுத்துவோம் என மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், உதவி ஆட்சியர் (பயிற்சி) ரா. வெங்கடேஷ்வரன்,இணை இயக்குநர்/ திட்ட இயக்குநர், மகளிர் திட்டம் செந்தில்வடிவு, விழுப்புரம் தேர்தல் நடத்தும் அலுவலர் முருகேசன், தோடக்கலைத்துறை, துணை இயக்குநர் அன்பழகன், விழுப்புரம் நகராட்சி ஆணையர் சியாமளா, விழுப்புரம் நகராட்சி பொறியாளர் புவனேஸ்வரி உட்பட பலர் கலந்துகொண்டனர்.



அனந்தபுரம் ரோட்டரி சமுதாய குழுமம் சார்பாக தேசிய பென்சில் தினம் உமையாள்புரம் பஞ்சாயத்து யூனியன் தொடக்கப் பள்ளியில் கொண்டாடப்பட்டது. அனந்தபுரம் ரோட்டரி சமுதாய குழுமம் முன்னாள் தலைவர் விக்கிரவாண்டி தாலுக்கா நுகர்வோர் கண்காணிப்பு குழு உறுப்பினர் ஜேசு ஜூலியஸ் ராஜா தலைமை தாங்கினார். தலைமை ஆசிரியை லோகாம்பாள் முன்னிலை வகித்தார். ஆசிரியர் பயிற்றுனர் கோபாலகிருஷ்ணன் மாணவ மாணவிகளுக்கு பென்சிலின் மகத்துவத்தைப் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தி அனைத்து மாணவ மாணவிகளுக்கும் பென்சில் வழங்கினார். இந்த நிகழ்ச்சிக்கு ஆசிரியர் லட்சுமண விநாயகமூர்த்தி மற்றும் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்




தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர்170 சட்டப்பேரவைத் தொகுதி (தனி) திமுக அமைச்சர் கோவை செழியன் தேர்தல் நடத்தும் அலுவலர் ஸ்ரீ சந்திரகுமாரிடம் வேட்பாளர் தாக்கல் செய்தார்.




தஞ்சாவூர்மாவட்டம், கும்பகோணம் சட்டப்பேரவைத்தொகுதி 171 திமுக வேட்பாளராக தஞ்சாவூர் வடக்கு மாவட்ட திமுக பொறுப்பாளரும், எம்எல்ஏவுமான க.அன்பழகன் கும்பகோணம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் வி எம் திருமலையிடம் மனு தாக்கல் செய்தார்.

# காஞ்சிபுரம் அண்ணா பிறந்த மண்ணில் உதயநிதி ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரம் தொடக்கம் பாசிச சக்திகளுக்கு தமிழகத்தில் இடமில்லை என அதிரடி

காஞ்சிபுரம் மார்ச் 31,

காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு உட்பட்ட சின்ன காஞ்சிபுரம் பகுதியில் அமைந்துள்ள அண்ணா நினைவு இல்லத்திற்கு வருகை தந்த அவர், அங்கிருக்கும் அண்ணாவின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். கடந்த 2024 நாடாளுமன்றத் தேர்தலின் போதும் இதே காஞ்சிமண்ணில்அண்ணா நினைவு இல்லத்திலிருந்து தான் தனது பிரச்சாரத்தைத் தொடங்கியதை நினைவுகூர்ந்த உதயநிதி ஸ்டாலின், அதேபோன்று தற்போதைய சட்டமன்றத் தேர்தலுக்கும் இங்கிருந்தே தொடங்குவது தனக்கு மட்டற்ற மகிழ்ச்சி அளிப்பதாகத் தெரிவித்தார்.



இதனைத் தொடர்ந்து காஞ்சிபுரம் ராஜாஜி மார்க்கெட் பகுதியில் உள்ள தேரடியில் நடைபெற்ற பிரம்மாண்ட பொதுக்கூட்டத்தில், காஞ்சிபுரம் தொகுதி வேட்பாளர் நித்யா சுகுமார் மற்றும் உத்திரமேரூர் தொகுதி வேட்பாளர் க.சுந்தர் ஆகியோரை ஆதரித்துப் பேசுகையில், திமுக என்பது எந்நேரமும் மக்களைச் சந்திக்கின்ற இயக்கம் என்றும், மக்களைச் சந்திக்க ஒருபோதும் அஞ்சியதில்லை என்றும் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசிய அவர், இந்த முறை தேர்தலில் முதியவர்கள், இளைஞர்கள், பெண்கள் மற்றும் படித்தவர்களுக்கு என உரிய முறையில் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதால் மக்கள் நிச்சயம் பேராதரவு தருவார்கள்எனநம்பிக்கை தெரிவித்தார். திரண்டுள்ள மக்களின் எழுச்சியையும் மகிழ்ச்சியான முகங்களையும் பார்க்கும்போதே சட்டமன்றத் தேர்தலின் வெற்றியை மக்கள் ஏற்கனவே முடிவு செய்துவிட்டதாகத் தெரிவித்த அவர், வரும் ஏப்ரல் 23ஆம் தேதி வாக்குச்சாவடிக்குச் சென்று உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து வேட்பாளர்களைப் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். மேலும், எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி தனது பிரச்சாரத்தை பாஜக போட்டியிடும் மயிலாப்பூர் தொகுதியிலிருந்து தொடங்கியுள்ளதைச் சுட்டிக்காட்டி விமர்சித்த உதயநிதி, எடப்பாடி பழனிசாமியின் கொள்கைத் தலைவர்கள் மோடியும் அமித்ஷாவும் தான் என்றும், ஆனால் திமுகவின் கொள்கைத் தலைவர்கள் அண்ணா போன்றவர்கள் என்றும் பேசினார். இந்தியாவிலேயே 'முரட்டு அடிமை' என்றால் அது எடப்பாடி பழனிசாமி தான் என்று கடுமையாக விமர்சித்த அவர், தமிழக மக்கள் ஒருபோதும் பாசிச பாஜக சக்திகளைத் தமிழ்நாட்டிற்குள் நுழைய அனுமதிக்க மாட்டார்கள் என்றார். தமிழக அரசு தேர்தல் வாக்குறுதிகளாகச் சொன்ன அனைத்துத் திட்டங்களையும் நிறைவேற்றியுள்ளதைச் சுட்டிக்காட்டிய துணை முதல்வர், முதலமைச்சரின் முதல் கையெழுத்தான விடியல் பயணத் திட்டம் முதல் மகளிர் உரிமைத் தொகையை 1,000 ரூபாயிலிருந்து 2,000 ரூபாயாக உயர்த்தியிருப்பது வரை பல்வேறு சாதனைகளை எடுத்துரைத்தார்.

இந்தத் தேர்தல் என்பது டெல்லிக்கும் தமிழ்நாட்டிற்கும் இடையே நடக்கும் தேர்தல் என்றும், உங்கள் வீட்டுப் பிள்ளையாக, உங்களில் ஒருவனாக அன்போடும் பாசத்தோடும் கேட்கிறேன், உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களியுங்கள் என்றும் உருக்கமாக வேண்டுகோள் விடுத்தார். நாளை திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் கலைஞர் பிறந்த திருவாரூர் மண்ணில் பிரச்சாரத்தைத் தொடங்க உள்ள நிலையில், அண்ணா பிறந்த மண்ணில் தான் பிரச்சாரத்தைத் தொடங்கியிருப்பது வரலாற்றுச் சிறப்புமிக்கது எனத் தனது உரையை நிறைவு செய்தார்.இப்பிரச்சாரத்தின் போது காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர், கழக கொள்கை பரப்பு செயலாளர் சி வி எம் பி எழிலரசன், மாநகராட்சி மேயர் மகாலட்சுமி யுவராஜ், மாநகர செயலாளர் சி கே வி தமிழ்ச்செல்வன், தலைமை செயற்குழு உறுப்பினர் எம் எஸ் சுகுமார், மாவட்ட இளைஞரணி செயலாளர் யுவராஜ், ஒன்றிய செயலாளர்கள் பி எம் குமார், படுநெல்லி பி எம் பாபு, பி சேகர், குமணன், ஞானசேகரன், குமார் மற்றும் மாவட்ட மாநகர ஒன்றிய பேரூராட்சி நிர்வாகிகள் பொது மக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# பூம்புகார் சட்டமன்ற தொகுதியில் முதல் நாளே வேட்பு மனு செய்த வேட்பாளர்கள்

மயிலாடுதுறை மார்ச் :31,

தமிழக சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு தமிழகம் முழுவதும் உள்ள 234 தொகுதிகளிலும் வேட்பு மனு தாக்கல் இன்று 30 ஆம் தேதி தொடங்கிய நிலையில் பூம்புகார் தொகுகிக்கு முதல் நாளிலேயே 3 பேர் மனு தாக்கல் செய்தனர். இதில் நாம் தமிழர் கட்சி வேட்பாளர் மாட்டு வண்டியில் ஊர்வலமாக வந்து வேட்புமனு தாக்கல் செய்தார்.




மயிலாடுதுறை மாவட்டத்தில் பூம்புகார் தொகுதிக்கு நாம் தமிழர் கட்சி வேட்பாளராக அறிவிக்கபட்டுள்ள இளயநகுலன் வயது 41 இவர் பொறையார் புதிய பேரூந்து நிலையத்திலிருந்து மாட்டு வண்டியில் ஊர்வலமாக வந்து தரங்கம்பாடி வட்டாட்சியர் அலுவலகத்தில் பூம்புகார் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் கீதாவிடம் மனுதாக்கல் செய்தார். ஊர்வலத்தில் ஏராளமான நாம் தமிழர் கட்சி தொண்டர்கள் வந்தனர்.வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து100மீட்டர்தூரத்தி;ல் அரசியல் கட்சியினர் கூட்டமாக வருவதை தடுக்க காவலர்கள் பாதுகாப்பு அடுக்குத் தடுப்புகள் அமைக்கப்பட்டிருந்தனர். வேட்பாளருடன் 4 பேர் மட்டுமே மனு தாக்கல் செய்ய அனுமதிக்கபட்டனர். வேட்பாளர் இளையநகுலன் எம்சிஏ படித்தவர், நாம் தமிழர் கட்சி துவக்கபட்டதிலிருந்து கட்சியில் உள்ளார். இக்கட்சியில் மாநில மீனவர் பாசறை ஒருங்கினைப்பாளராகவும் பணியாற்றி வருகிறார். இவருக்கு திருமணமாகி பிரபாவதி என்ற மனைவியும், ஒரு மகன், ஒரு மகள் உள்ளனர். இவர் தரங்கம்பாடி அருகே உள்ள சந்திரபாடி மீனவ கிராமத்தை சேர்ந்தவர்.

மேலும் செம்பனார்கோவில் ஒன்றியத்தில் உள்ள பரசலூர் கிராமத்தை சேர்ந்த மாயாவெங்கடேசன் வயது 54 தேர்தல் நடத்தும் அலுலவர் கீதாவிடம் வேட்புமனு தாக்கல் செய்தார். இவர் திராவிட மக்கள் மசோதா கட்சியின் நிறுவனரும், இக்கட்சியின் தலைவராகவும் உள்ளார். மயிலாடுதுறை மாவட்டத்தின் பல பகுதிகளில் பல்வேறு சமூகப் பணிகளும், மருத்துவ முகாம்களையும் செய்து வருகிறார். சேவை சங்கங்கள் நடத்தி பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி வருகிறார். இவர் நாகப்பட்டினம் மாவட்டமாக இருந்த போது, மாவட்ட கவுன்சிலராகவும் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் வேலம்புதுகுடியை சேர்ந்த தம்பு இன்பராஜ் வயது 46, சுயேட்சையாக வேட்பு மனுதாக்கல் செய்தார். இவர் தந்தை தம்புசாமி, தாயார் செங்கோல்மேரி மற்றும் மனைவி 2 குழந்தைகள் உள்ளனர்.



நடைபெற உள்ள 2026 சட்டமன்ற தேர்தல் தமிழகத்தில் சூடு பிடித்துள்ள நிலையில் அதிமுக சார்பில் அதன் பொதுச்செயலாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிச்சாமி பல்வேறு திட்டங்களைத் தேர்தல் அறிக்கையில் அளித்துள்ளார், அதில் தேர்தல் வாக்குறுதி 185 யில் தமிழகத்தில் ஏழ்மையிலும் வறுமையிலும் வாழும் போயர் இன மக்களுக்கு நலவாரியம் அமைக்கப்படும், நலவாரியத்தின் வாயிலாக அவர்களின் வாழ்வு மேம்பட சிறப்பு நடவடிக்கைஎடுக்கப்படும்எனஅறிவித்துள்ளார், இதனைவரவேற்கும்பொருட்டு ,தமிழக உழைப்பாளி மக்கள் ஜனநாயக கட்சியின் சார்பில் அதன் நிறுவனத் தலைவர் எஸ் சுதாகர் பழனிசாமியின் இந்த வாக்குறுதியை ஒட்டு மொத்த போயர் இன மக்களின் சார்பாக வரவேற்பதாக ,அவருக்கு நன்றி தெரிவிப்பதோடு, நடைபெற உள்ள 2026 சட்டமன்ற தேர்தலில் அவருக்கு தமிழக உழைப்பாளி மக்கள் ஜனநாயக கட்சி ஆதரவளிப்பதாக தெரிவித்துள்ளார், மேலும் அதிமுக பொதுச்செயலாளர்எடப்பாடி பழனிச்சாமி ஆட்சிக்கட்டில்அமர்வதற்கு, அதிமுக கூட்டணிக்கு ஆதரவாக தமிழக முழுவதும் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபடப் போவதாகவும் தெரிவித்துள்ளார்,



தூத்துக்குடி அன்னை ஜூவல்லர்ஸ் ஏற்பாட்டில் அமெரிக்கன் ஆஸ்பத்திரி மற்றும் அரவிந்த் கண் மருத்துவமனை இணைந்து 7 வது மருத்துவ முகாம் நடைபெற்றது. தூத்துக்குடியில் தொடர்ந்து ஏழாவது வாரமாக ஜார்ஜ் ரோடு சுமங்கலி மண்டபத்தில் பொது மருத்துவம் மற்றும் கண் மருத்துவ முகாம் நடைபெற்றது இந்த முகாமில் அன்னை ஜூவல்லர்ஸ் நிர்வாக இயக்குனர் செல்வராஜ் துணை நிர்வாக இயக்குனர் விக்னேஷ் விநாயகமூர்த்தி துணை இயக்குனர் ராஜேஷ் விநாயகமூர்த்தி மற்றும் அன்னை ஜுவல்லர்ஸ் மக்கள் செய்தி தொடர்பாளர்கள் மாரிக்கனி மற்றும் ரவிக்குமார் அரவிந்த் கண் மருத்துவமனை முகாம் அமைப்பாளர் கந்தசாமி அமெரிக்கன் ஆஸ்பத்திரி முகாம் அமைப்பாளர் முத்துகிருஷ்ணன் மற்றும் கண் மருத்துவர்கள் பொது மருத்துவர்கள் செவிலியர்கள் மற்றும் அன்னை ஜூவல்லர்ஸ் ஊழியர்கள் கலந்து கொண்டனர் முகாமில் 500 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கண் மருத்துவம் மற்றும் பொது மருத்துவத்தில் பங்கு பெற்று பயனடைந்தனர்

# பொறையாரில் "என் வாக்கு, என் உரிமை" விழிப்புணர்வு பேரணி 500க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவர்கள் பங்கேற்பு

மயிலாடுதுறை மார்ச் :31,

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி வட்டம், பொறையார் த.பே.மா.லு கல்லூரியில் வணிகவியல் துறை, கூட்டுறவுத்துறை மற்றும் நாட்டு நல பணி திட்டம் இணைந்து "என் வாக்கு,என் உரிமை" 100% வாக்களிப்பு விழிப்பு ணர்வு பேரணி நடைபெற்றது .கல்லூரி வளாகத்தில் துவங்கிய பேரணிக்கு முதல்வர் முனைவர் எஸ்.ஜான்சன் ஜெயக்குமார் தலைமை வகித்தார். பேரணியை தரங்கம்பாடி வட்டாட்சியர் சதீஷ்குமார் கொடியசைத்து துவக்கி வைத்தார்,





துணை முதல்வர் ஹேனா கிளாடிஸ், வணிகவியல் துறை தலைவர் சேவியர் செல்வகுமார்,தேர்தல் எழுத்தறிவு கழகம் கல்லூரி ஒருங்கிணைப்பாளர் வீ.சம்பத் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின் படி, "என் வாக்கு, என் உரிமை" 100% வாக்களிப்பு விழிப்புணர்வு பேரணியில் மக்கள் மத்தியில் வாக்குரிமை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தியவாறு முழக்கங்களை எழுப்பிக் கொண்டு 500க்கு மேற்பட்ட மாணவர்கள் உற்சாகமாக பிரச்சாரம் செய்தனர்.

இப்பேரணி கல்லூரி வளாகத்திலிருந்து தொடங்கி சர்ச் தெரு, கடுதாசி பட்டறை, அரண்மனை தெரு, மெயின் ரோடு பழைய பேருந்து நிலையம் வழியாக புதிய பேருந்து நிலையம் வந்தடைந்தது பேரணியை நிறைவு செய்தனர். பேரணியில் நாட்டு நல பணி திட்டம் ஒருங்கிணைப்பாளர்கள் பேராசிரியர்கள் ஷீலா எட்வர்ட், தங்கராஜ், ஜெயசீலன் தேர்தல் எழுத்தறிவு கழகம் கல்லூரி துணை ஒருங்கிணைப்பாளர் தேவசகாயம் மற்றும் கல்லூரி பேராசிரியர்கள், கண்காணிப்பாளர், அலுவலக ஆய்வக ஊழியர்கள், வருவாய்த்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முன்னதாக பேரணி துவங்குவதற்கு முன்பு தேர்தல் திருவிழாவில் 'என்வாக்கு, என்உரிமை' என்ற எண்ணத்துடன் 100% வாக்குப் பதிவு செய்யவேண்டும்" என்று இளம் வாக்காளர்களின் விழிப்புணர்வு உறுதி மொழி ஏற்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.



## பெரியகுளம் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் அமமுக வேட்பாளர் கதிர்காமு கூட்டணி கட்சி நிர்வாகிகளை சந்தித்து வாழ்த்து பெற்றார்

பெரியகுளம், மார்ச், 31:
தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே உள்ள கெங்குவார்பட்டி, வடுகபட்டி, கள்ளிப்பட்டி, தாமரைக்குளம், பெரியகுளம் உள்ளிட்ட ஊர்களில் அமமுக வேட்பாளர் கதிர்காமு அதிமுக, அமமுக, பிஜேபி உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகளை அவர்கள் இல்லங்களில் சென்று சந்தித்து பொன்னாடை அணிவித்து வாழ்த்து பெற்றார். இந்த நிகழ்ச்சியில் அமமுக மாவட்ட செயலாளர்கள் காசிமாயன், அதிமுக, அமமுக, ஒன்றிய செயலாளர்கள் ராஜகுரு ,ராமசாமி, குள்ளப்புரம் கணேசன், தேனி நகரசெயலாளர் குரு கணேஷ், மாவட்ட துணைசெயலாளர் அன்னக்கொடி சௌந்தரராஜன், மாவட்ட அம்மா பேரவை செயலாளர் அபுதாகிர், மாவட்ட இளைஞர்பாசறைஅமர்நாத், நகர செயலாளர்கள் குபேந்திரன், பாலா, நகர இணை மணி வெங்கடேஷ், பொதுக்குழு உறுப்பினர் சலீம்அதிமுக, பேரூர் கழக செயலாளர் பாலமுருகன் அமமுக பேரூர் கழக செயலாளர் ஜெயராமன், கெங்குவார்பட்டி பேரூர்கழக செயலாளர் முத்துராஜ், தாமரைக்குளம்,மனேகரன்,முன்னால் பேரூர் கழக செயலாளர் தண்டபாணி, ஒன்றிய மாணவரணி செயலாளர் பாலன், ஒன்றிய இணை செயலாளர் செல்லப்பாண்டி, தகவல் தொழில்நுட்ப பிரிவு லிங்கேஸ்வரன் மற்றும் அதிமுக, அமமுக, பிஜேபி உள்ளிட்ட கூட்டணி. கட்சி நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

## ஆண்டிபட்டியில் பிரச்சாரத்தை தொடங்கிய அதிமுக வேட்பாளர் லோகிராஜன் ; பொதுமக்கள் மத்தியில் உற்சாக வரவேற்பு

தேனி, மார்ச். 31
வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலுக்கு ஆண்டிபட்டி சட்டமன்ற



தொகுதி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளராக லோகிராஜன் அதிமுக தலைமை கழகத்தால் அறிவிக்கப்பட்டார். வேட்பாளராக லோகிராஜன் அறிவிக்கப்பட்ட பின்னர் மார்ச் 28ல் ஆண்டிபட்டிக்குவருகைபுரிந்தபோது அவருக்கு ஆண்டிப்பட்டி சட்டமன்ற தொகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் , அதிமுகவினர் மற்றும் அதன் கூட்டணி கட்சியைச் சேர்ந்த நிர்வாகிகள் தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். அதன் பின்னர் நேற்று ஆண்டிபட்டி பகுதியில் ஒவ்வொரு சமுதாயத்தை சார்ந்த நிர்வாகிகளை அவர்கள் வசிக்கும் பகுதிக்கு நேரில் சென்று மாலை சால்வை அணிவித்து மரியாதை செலுத்தி வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

இந்த வாக்கு சேகரிப்பின் போது அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி கே. பழனிச்சாமியின் தேர்தல் வாக்குறுதிகளை பொதுமக்களிடம் எடுத்துரைத்து சட்டமன்றத் தேர்தலில் அனைத்து பொதுமக்களும் இரட்டை இலை சின்னத்திற்கு தங்களது ஆதரவை அளித்து வெற்றி பெற செய்யுமாறு பொதுமக்களிடம் கேட்டுக் கொண்டார் .

இதில் அதிமுக ஆண்டிபட்டி பேரூர் கழகச் செயலாளர் அருண்மதி கணேசன் மற்றும் கூட்டணி கட்சியான பாரதிய ஜனதா கட்சி நிர்வாகிகள், அம்மா மக்கள் முன்னேற்ற கழக நிர்வாகிகள் , பாட்டாளி மக்கள் கட்சியை சேர்ந்த நிர்வாகிகள் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## கோடை காலம் தொடங்கியுள்ளதால் பொதுமக்கள் அனைவரும் உரிய நடைமுறைகளை பின்பற்றுமாறு மாவட்ட ஆட்சியர் என்.ஓ.சுகபுத்ரா தகவல்

விருதுநகர், மார்ச் 31
கோடைகாலம் தொடங்கியுள்ளதால், வெப்ப அலை தாக்கம் அதிகரித்து வருகிறது. இதனால் பொதுமக்கள் தேவையின்றி மதியம் 12 மணி முதல் 3 மணி வரை வெளியில் செல்லவும், கடின உழைப்பு மேற்கொள்ளவும் தவிர்க்க வேண்டும்

உலக வெப்பமயமாதல் காரணமாக வெப்பநிலை நாளுக்கு நாள் உயர்ந்து வருகிறது. இதனால் பொதுமக்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ள கீழ்க்கண்ட வழிமுறைகளை கடைபிடிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இலகுவான, வெளிர் நிறம் கொண்ட பருத்தி உடைகள் அணியவும், வெளியில் செல்லும் போது குடை, தொப்பி,



கண்ணாடி, காலணிகள் பயன்படுத்த வேண்டும்.

அதிக வெப்ப நேரங்களில் (12 மணி முதல் 3 மணி வரை) வெளிப்புற வேலைகளை தவிர்க்கவும். பயணிக்கும் போது போதுமான குடிநீர் எடுத்துச் செல்லவும், தாகம் இல்லாவிட்டாலும் அடிக்கடி தண்ணீர் குடிக்கவும், உடலில் நீரிழப்பு ஏற்படுத்தும் ஆல்கஹால், தேநீர், காபி, கார்பனேற்றப்பட்ட பானங்கள் தவிர்க்கவும். லஸ்ஸி, நீர்மோர், எலுமிச்சைச்சாறு போன்ற நீர்ச்சத்து பானங்களை அதிகமாக எடுத்துக் கொள்ளவும். வீட்டை குளிர்ச்சியாக வைத்திருக்க திரைச்சீலை கள் மற்றும் சன்ஷேட்கள் பயன்படுத்தவும், குழந்தைகள் மற்றும் செல்லப்பிராணிகளை நிறுத்தப்பட்ட வாகனங்களின் அருகில் விட வேண்டாம். வேலை நேரத்தில் யாராவது மயக்கம் அடைந்தால், உடனடியாக குளிர்ச்சியான இடத்திற்கு மாற்றி தண்ணீர் அல்லது உப்பு சர்க்கரை கரைசல் கொடுக்க வேண்டும். அவசர தேவைகளுக்கு 108 ஆம்புலன்ஸ் சேவையை தொடர்பு கொள்ளவும். வெப்ப அலை பாதிப்பு ஏற்பட்டால் அருகிலுள்ள அரசு மருத்துவமனை அல்லது ஆரம்ப சுகாதார நிலையத்தில் உடனடியாக சிகிச்சை பெற வேண்டும். மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் வெப்ப அலை பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான படுக்கை வசதிகள் மற்றும் உப்பு சர்க்கரை கரைசல் (ORS) போதுமான அளவில் தயாராக கையிருப்பு உள்ளன. பொதுமக்கள் மேற்கண்ட அறிவுரைகளை கடைப்பிடித்து வெப்ப அலை தாக்கத்திலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர்.மரு. என்.ஓ.சுகபுத்ரா, கேட்டுக் கொண்டுள்ளார்.

## சட்டமன்ற தேர்தலுக்காக வேட்பு மனு தாக்கல் செய்யும் இடம் மற்றும் காலம் குறித்து ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் தகவல்!

ராமநாதபுரம், மார்ச் 31
ராமநாதபுரம் மாவட்ட தேர்தல் அலுவலரும் , ராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்ததாவது : இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவிப் பின்படி, தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 க்கான தேர்தல் அறிவிப்பு அரசிதழில் 30.03.2026 அன்று வெளியிடப்பட்டுள்ளது. இதனையடுத்து, சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்களால் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் தேர்தல் அறிவிப்பு (படிவம்1) 30.03.2026 அன்றே வெளியிடப்பட்டு, மக்கள் பிரதிநிதித்துவ சட்டம், 1951ன் பிரிவு 31 , தேர்தல் நடத்தை விதிகள், 1961ன் வீதி 3 ஆகியவற்றின் அடிப்படையில் சம்மந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்கள்



இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளனர்..

வேட்புமனு தாக்கல் செய்யும் காலம் 30.03.2026 (திங்கள்) முதல் 06.04.2026 (திங்கள்) வரை நடைபெறும். வேட்பாளர்கள் அரசு அலுவலக வேலை நாட்களில் மட்டும் காலை 11.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை மட்டுமே வேட்புமனுக்களை தாக்கல் செய்யலாம். இந்திய தேர்தல் ஆணையம் அறிவிப்பின்படி, 31.03.2026 (செவ்வாய்), 01.04.2026 (புதன்), 03.04.2026(வெள்ளி) , 05.04.2026 (ஞாயிறு) ஆகிய நாட்கள் விடுமுறை நாட்களாக அறிவிக்கப்பட்டுள்ளதால், அன்று வேட்பு மனு பெறப்படமாட்டாது என்று இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. வேட்புமனு தாக்கல் செய்யும் இடங்கள்:209. பரமக்குடி (தனி) வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், பரமக்குடி. 210, திருவாடானை வட்டாட்சியர் அலுவலகம், திருவாடானை. 211. இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், இராமநாதபுரம். 212. முதுகுளத்தூர் வட்டாட்சியர் அலுவலகம்,முதுகுளத்தூர்.

தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் 07.04.2026 (செவ்வாய்) அன்று காலை 11.00 மணி முதல் சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் அலுவலகங்களில் பரிசீலிக்கப்படும். வேட்புமனு திரும்பப் பெறுவதற்கான கடைசி நாள் 09.04.2026 (வியாழன்) ஆகும். மேலும் , தேர்தலில் போட்டியிருந்தால் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு 23.04.2026 (வியாழன்) அன்று நடைபெறும். வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யும் போது மக்கள் பிரதிநிதித்துவ சட்டம், 1951 மற்றும் தேர்தல் நடத்தை விதிகள், 1961 ஆகியவற்றின் விதிமுறைகள் கட்டாயம் கடைபிடிக்கப்பட வேண்டும். தேர்தல் அறிவிப்பு (படிவம்1) தமிழ் , ஆங்கில மொழிகளில் சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் அலுவலகங்களில் அறிவிப்பு பலகையில் வைக்கப்பட்டுள்ளது. தேர்தல் ஆணையம் வழங்கியுள்ள அணைத்து வழிகாட்டுதல்களையும் வேட்பாளர்களும் அரசியல் கட்சிகளும் கட்டாயமாக பின்பற்ற வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலரும், ராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.



கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் திமுக SMT.கவிதா கல்யாணம் சுந்தரம் கோவை வடக்கு மாவட்ட செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி ஏற்பாட்டில் மேட்டுப்பாளையம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஒன்றிய,நகர பேரூர் திமுக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. உடன் அவைத் தலைவர் பொதுக்குழு செயற்குழு உறுப்பினர்கள் நிர்வாகிகள் அணி நிர்வாகிகள் உறுப்பினர்கள் உடனிருந்தனர்



தமிழ்நாடு மாநில மணல் லாரி உரிமையாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பினர் சார்பில் மாநிலத் தலைவர் யுவராஜ் தலைமையில் நேற்று மாவட்ட ஆட்சியரை சந்தித்து கோரிக்கை மனு அளித்தனர். அதில் தினசரி ஒரு லட்சம் டன்னுக்கு அதிகமான கனிமங்கள் கர்நாடக மாநிலத்திற்கு ஓசூர் வழியாக தமிழக கனிம வளங்களை கடத்தி அரசுக்கு வருவாய் இழப்பை ஏற்படுத்துவதை உடனடியாக தடுத்து நிறுத்திட வேண்டியும், 15 தினங்களுக்குள் கனிம வளங்களை கடத்துவோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியும், அவ்வாறு நடவடிக்கை எடுக்காத நிலையில் காவல்துறை மற்றும் நீதிமன்றம் மூலமாக வழக்கு தொடரப்படும் என புகார் மனுவில் கூறப்பட்டிருந்தது. இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசும்பொழுது, மாவட்ட ஆட்சியர் உடனடியாக நாங்கள் நடவடிக்கை எடுத்திருப்ப தாகவும், அவ்வாறு நடவடிக்கை எடுத்திருந்தால் கிரஷர் இது என் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என கேள்வி எழுப்பினார். மேலும் மாதத்திற்கு 60 கிரஸரிலிந்து கனிம வளங்கள் வெளி மாநிலங்களுக்கு செல்வதாகவும் தெரிவித்தார். 200க்கும் அதிகமான கிரஷர்கள் இயங்கி வரும் நிலையில் கனிமவளத்துறை 99 கிரஷர்களுக்கு மட்டுமே அனுமதி அளித்துள்ளதாகவும், அனுமதி இல்லாமல் இயங்கும் ரிசர்வ் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என வேதனையுடன் தெரிவித்தார். இந்த நிகழ்வின்போது பொதுச்செயலாளர் தினேஷ், தமிழ்நாடு மணல் லாரி சங்கத்தின் தலைமை நிலைய செயலாளர் வினோத், சென்னை மணல் லாரி சங்க தலைவர் ஐயப்பன், ராணிப்பேட்டை லாரி ஓனர் உரிமையாளர் சங்க தலைவர் ரத்தினம், உள்ளிட்ட பல்வேறு மாவட்ட சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## நடமாடும் மருத்துவமனை மூலம் மலைவாழ் மக்களுக்கு இலவச மருத்துவ பரிசோதனை முகாம்

கோவை, மார்., 31 :
கோவை மாவட்டம், ஆனைமலை டாப்சிலிப் பகுதியில் உள்ள ஆனைமலை புலிகள் காப்பகம், வனத்துறை அலுவலக வளாகத்தில் சத்ய சாயி சேவா நிறுவனங்கள் கோவை மாவட்டம் மற்றும் பொள்ளாச்சி, கோட்டூர் சமிதி உறுப்பினர்கள் ஏற்பாட்டில், ஆனைமலை புலிகள் காப்பகம் வனத்துறையினர் ஒத்துழைப்புடன் டாப்சிலிப், கோழிக்கமுத்தி, எருமைப்பாறை ஆகிய பகுதிகளை சேர்ந்த மலைவாழ் மக்கள் மற்றும் குழந்தைகள் என சுமார் 200 க்கும் மேற்பட்டோருக்கு சத்ய சாயி மொபைல் மருத்துவமனை மூலம் மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில் 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மலைவாழ் மக்களை அவர்களின் இருப்பிடத்திற்கே சென்று சிற்றுந்து மூலம் முகாமிற்கு அழைத்து வந்து, மருத்துவ பரிசோ





தனை முடிந்த பிறகு மீண்டும் அவர்களை இருப்பிடத்திற்கே சேவாதள தன்னார்வலர்கள் அழைத்துச் சென்றனர். இந்த முகாமில் இரத்தம், சர்க்கரை, கண் பரிசோதனைகள், மற்றும் ஹிமோ குளோபின், ஈசிஜி, எக்ஸ்ரே, ஆகிய பரிசோதனைகள் செய்யப்பட்டு மருந்துகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கப்பட்டன. மேலும் இதில் தேர்வு செய்யப்பட்ட 10 பயனாளிகளுக்கு கண்புரை அறுவை சிகிச்சை இலவசமாக செய்யப்பட்டது. இந்த மருத்துவ முகாமில் ஆல்வா மருத்துவமனை, மற்றும் கோவை ராம் நகர் பொன்னம்மாள் கண்மருத்துவமனை மருத்துவர்கள் 6 பேர் கலந்து கொண்டனர். இந்த முகாமில் ஏராளமான சேவாதள தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர். இந்த சத்ய சாயி நடமாடும் மருத்துவ பேருந்து கோவையில் பல்வேறு இடங்களில் இலவசமாக மருத்தவ முகாம்களை நடத்தி வருகின்றன என்பதுகுறிப்பிடத்தக்கது.



இந்திய சோஷலிஸ்ட் கட்சி தேசிய செயலாளரும், HMKP தொழிற்சங்க மாநில பொதுச் செயலாளருமான தமீமுல் அன்சாரி ரஹ்மானி, தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினை சந்தித்து சட்டமன்ற தேர்தலில் தமது கட்சி மற்றும் தொழிற்சங்கத்தின் ஆதரவைத் தெரிவித்துக் கொண்டார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJAV. CELL: 9443699066